பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 27 செவ்வாய்க்கிழமை (10.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 135

# ஐ.நா. குழுவை நாட்டுக்குள் அனுமதித்து காணாமற்போனோரை கண்டுபிடியுங்கள்!

## உறவுகளைத் தொலைத்தோர் பிரகடனம்

கொழும்பு, ஏப்ரல் 10

பலவந்த ஆட்கடத்தல் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட குழு இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக விடுத்திருக்கும் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து - அவர்களை நாட்டுக்குள் அனுமதித்து - காணாமற்போன எமது உறவுகளை மீட்கவும், கடத்தல்கள் மற்றும் ஆட்கள் காணாமற்போதல் போன்ற சம்பவங்கள் இனி மேலும் தொடராது இருப்பதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுங்கள்.

- இவ்வாறு அரசிடம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கும் பிரகடனம் ஒன்று கொழும்பில் நேற்று வெளியிடப்பட்டிருக்கிறது.

தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் உறவினர்கள் நூற்றுக்கணக்கில் ஒன்றுகூடி நடத்திய மாநாட்டிலேயே பல கோரிக்கைகள் அடங்கிய இப் பிரகடனம் வெளியிடப்பட்டிருக்கிறது.

புறக்கோட்டை கதிரேசன் வீதியில் உள்ள வீரமைலன் மண்டபத்தில் மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் நேற்று மாலை இந்த மாநாடு நடைபெற்றது. மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும் மேலக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோகணேசன் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

'இலங்கையில் காணாமல் போயுள்ள எமது குடும்ப அங்கத்தவர்களையும், நண்பர்களையும் கண்டுபிடிப்பதற்கான பகிரங்க கோரிக்கை' - என்ற தலைப்பிட்டு மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்கள் கண்காணிப்புக்குழுவின் முன் முயற்சியினால் இங்கு கூடியிருக்கும் நாம்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மறு அறிவித்தல்வரை இரவு 7 மணிமுதல் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஏப்.10

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் மறு அறிவித்தல்வரை இரவு 7 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று யாழ். பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஊரடங்கு நடைமுறை தொடர்பாக இதுவரை காலமும் படைத்தலைமையே அறிவித்து வந்தது.

இனிவரும் காலங்களில் பொலிஸாரே ஊரடங்கு தொடர்பான அறிவித்தல்களை விடுப்பர் என யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுதல் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## திண்டிவனம் வெடிவிபத்து: சூத்திரதாரி சரணடைந்தார்

திண்டிவனம், ஏப்.10

திண்டிவனத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பாரிய வெடிவிபத்துச் சம்பவத்தின் சூத்திரதாரியான சேகர் என்பவர் வேலூர் நீதிமன்றத்தில் நேற்றுச் சரண் அடைந்தார்.

சம்பவத்தை அடுத்து தப்பி ஓடித் தலைமறைவாக இருந்த வெடிமருந்துக் கிடங்கின் உரிமையாளரான இவர் நேற்றுச் சரண் அடைந்ததையடுத்து, அவரை விளக்கமறி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தல்களுக்கும் அரசுக்கும் சம்பந்தமில்லை

### அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி

''நாட்டில் இடம்பெற்றுவருகின்ற ஆட்கடத்தல், காணாமல் போதல், கப்பம் பெறுதல், கொலைகள் என்பவற்றுடன் அரசுக்கு எதுவித தொடர்பும் கிடையாது. ஆனால், இதனைத் தடுத்துநிறுத்த அரசு தன்னாலான முயற்சிகளை எடுக்கும்.''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான பி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நேற்றிரவு அலரி மாளிகையில் இடம்பெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இக்கருத்தை முன்வைத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஜே.வி.பியினர் கலந்துகொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது.

நாட்டில் இடம்பெறும் இவ்வாறான வன்முறைகளைத் தடுப்பதற்கு அரசு உரிய கவனம் எடுக்கும். இதற்காக நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசுக்கு எதிரான பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு அரசு அடிபணியாது. எமக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உண்டு. அதேவேளை, மக்களின் ஆதரவும் எமக்கு உண்டு. இத்தகைய வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் யார் என்பது எமக்குத் தெளிவாகத் தெரியாது.

இவற்றைக் கட்டுப்படுத்த நாம் உரிய நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை, நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சி எடுப்போம் - என்றும் ஜனாதிபதி கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (சி)

## வெளிமாவட்டங்களுக்குச் சென்றவர்களில் 64% வெளிமாவட்டங்களில் தங்கிவிட்டனர்!

யாழ்ப்பாணம், ஏப்.10

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்றவர்களில் 64 சதவீதமானோர் திரும்பி வரவில்லை. அதாவது ஏனைய மாவட்டங்களில் தங்கிவிட்டார்கள்!

அதற்கும் மேலாக, 7,000 பேர் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு பயண அனுமதி பெற்றுவிட்டு கப்பலுக்கும் விமானத்துக்கும் என்று காத்திருக்கின்றார்கள்!

குடாநாட்டில் இருந்து விமானம் மற்றும் கப்பல் மூலம் வெளிமாவட்டங்களுக்குச் செல்பவர்களில், குறைந்த எண்ணிக்கையினரே மீளத் திரும்பி வருகின்றனர் - என்று புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் சுமார் 55 ஆயிரம் பேர் கப்பல் மற்றும் விமானம் மூலம் பயண அனுமதி பெற்று வெளிமாவட்டங்களுக்குச் சென்றனர்.

ஆனால், அவர்களில் 20 ஆயிரத்துக்கும் குறைந்த எண்ணிக்கையினரே மீண்டும் இங்கு திரும்பியுள்ளனர் என்று படைத்தரப்பினரின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு பயண அனுமதி பெற்று, போக்குவரத்து வசதிக்காக மேலும் 7 ஆயிரம் பேர் காத்திருக்கின்றனர் என்றும் அந்தப் புள்ளி விவரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-1)

## விடுதலைப் புலிகளின் விமானப்படை இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தல் அல்ல

### எரிச்சல் ஊட்டுவதாகவே உள்ளது என்கிறார் விமானப்படையின் புதிய தளபதி



புதுடில்லி, ஏப்.10

தமிழீழ விடுதலைப் புலிகள் வான்படை ஒன்றை உருவாக்கியிருப்பது, இந்தியாவுக்கு அச்சுறுத்தல் அல்ல - என்று இந்தியாவின் விமானப்படையின் புதிய தளபதி ஏயர் மார்ஷல் பாலி மேஜர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் வான் படையினர் கடந்த மாதம் 26ஆம் திகதி, கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். ஏயர் மார்ஷல் பாலி மார்ச் 31ஆம் திகதி விமானப்படையின் புதிய தளபதியாகப் பதவி ஏற்றார். அதன் பின்னர் நேற்று (04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவருக்கு தற்காப்பு ஆயுதங்கள் வழங்கக்கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம்

### விடுதலைச் சிறுத்தை அமைப்பு நேற்று நடத்தியது

சென்னை, ஏப்.10

★ இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகும் தமிழக மீனவர்களுக்கு தற்காப்பு ஆயுதங்கள் வழங்க வேண்டும்.

★ கச்சதீவை மீட்டுக் கொடுக்கவேண்டும்.

மேற்கண்ட இரு கோரிக்கைகளையும் முன்வைத்து விடுதலைச்சிறுத்தைஅமைப்பு சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

சென்னை அரச பொது மருத்துவமனைக்கு எதிரே அமைந்துள்ள மெமோரியல் மண்டபத்துக்கு அருகே, இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

அமைப்பின் தலைவர் தொல். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதி மறுப்பையும் மீறி பிரான்ஸில் நேற்று ஈழத் தமிழர்கள் ஒன்றுகூடல்

பாரிஸ், ஏப்.10

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்கொள்ளப்படவிருந்த கூட்டத்துக்கு பிரான்ஸ் அரசு அனுமதி வழங்க மறுத்திருந்தபோதும் நேற்று பிற்பகல் 2 மணியளவில் ரொக்கெட்றோ சதுக்கத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்தவேளை, பிரான்ஸ் நாட்டுப் பொலிஸாரால் அங்கு கூடியவர்கள் திருப்பியனுப்பப்பட்டனர். இதனையடுத்து அவர்கள் இன்னொரு பகுதியில் கூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து லாக்கூர்ண நகரசபை உறுப்பினர் அன்ரனி ரூசல் அங்கு விஜயம் செய்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## சிவாஜிலிங்கம் எம்.பியிடம் நேற்றும் சீ.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஏப். 10

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் மூன்றாவது தடவையாக நேற்றும் நான்கு மணிநேரம் பயங்கரவாதத் தடுப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று வருவது குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அவரது நடவடிக்கைகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேசமயம், அவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் இன்று விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (சி)

## மட்டக்களப்பில் அடை மழை பெய்கிறது; அகதிகளின் கூடாரங்களுக்குள் வெள்ளம்!

மட்டக்களப்பு, ஏப்.10

மட்டக்களப்பு பிரதேசத்தில் கடந்த மூன்று தினங்களாகத் தொடரும் அடைமழை காரணமாக, இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கி உள்ளனர்.

பாவனைக்குதவாத கூடாரங்கள் வழங்கப்பட்டதாலும் தரை விரிப்பு வழங்கப்படாததாலும் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

அவர்களின் கூடாரங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் அவற்றில் தங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நிவாரண உதவியாக வழங்கப்பட்ட அரிசி, சீனி, பருப்பு போன்றவை மழையில் நனைந்து சேதமாகியுள்ளன. தமது உடைமைகளும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது பாடசாலைகள் விடுமுறைக்கு மூடப்பட்டிருப்பதால், அங்கு சென்று தங்குவதற்கு மக்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து மழை பெய்தால் அகதிகள் மீண்டும் இடம்பெயரவேண்டிய நிலை உருவாகும் எனத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

இதேவேளை-

அகதி முகாம்களில் உள்ள 18பேரை அம்மை நோய் பீடித்துள்ளது. அவர்கள் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டி.அரியநேத்திரன் தெரிவித்தார். (அ-1)

## ஆஸியிலிருந்தே புலிகளுக்கு பெருமளவு நிதி கிடைக்கிறது

### அங்கு வைத்து கொஹன்ன தகவல்

கொழும்பு, ஏப். 10

விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியில் திரட்டி வரும் பெரும் தொகைப் பணத்தில் ஆறில் ஒரு பகுதி ஆஸ்திரேலியாவிலிருந்தே அவர்களுக்குக் கிடைக்கின்றது.

- இவ்வாறு ஆஸ்திரேலிய ஊடக காங்கிரஸிடம் தெரிவித்திருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளரும், இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர்நாயகமுமான பாலித கொஹன்ன.

தற்போது ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருக்கும் அவர், அங்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார் என செய்தி ஊடகங்கள் தகவல் வெளி

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி **அந்தோனிப்பிள்ளை சசிஷா** அவர்களின்
அன்புத் தந்தை **செபஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனடி இணைந்திட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(59514) கல்லூரிச் சமூகம், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

## Jaffna College Institute of Technology Vaddukoddai

**The following courses will commence in Mid. April 2007**

DIPLOMA COURSES
1. Computer Programming & Data Processing — *Duration - 1 Year(full time)*
   *(include Application Packages, C, Java & Oracle)*
2. Civil Draughtsmanship — *Duration - 1 Year(full time)*
   *(include Auto CAD,Quantity Surveying & Levelling)*

Apply before 14th April 2007

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-
Director,
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

T.Phone 060 2213139 E.mail - jcit@sltnet.lk

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 * 04 * 1940 |  | 10 * 04 * 2006 |

அமரர்

**இராசையா சோதிமலர்**

எங்கள் குடும்ப ஒளிவிளக்கு மறைந்து
ஓராண்டென்ன எத்தனை
ஆண்டுகள் ஆனாலும்
எங்கள் மனதை விட்டகலாது.
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஆலடியானை வேண்டுகின்றோம்.

*என்றும் உங்கள் நினைவில்*
இ.இராசையா (கணவர்), த.ரேவதி (மகள்-லண்டன்), தமிழழகன் (மருமகன்-லண்டன்), ஜோதி (பேரப்பிள்ளை-லண்டன்), அன்பு உறவுகள்.

'மலர்மகள்'
அல்வாய் வடமேற்கு,
அல்வாய். (சி-52206)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 * 12 * 1951 |  | 10 * 04 * 2006 |

அமரர்

*சண்முகரட்ணம் காந்தபத்மநாபன்*

எமது வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும்
நீர் ஆற்றிய பங்கு
எமது ஒளிமயமான எதிர்காலத்திற்காக
தன்னலம் கருதாத உமது சேவை
நீர் உடலிலில்லாத போதும்

எமது நினைவலைகளில்
நீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஒரு வருடம் ஆகிவிட்டாலும்- எம்முள் கலந்து
எமது சொல்கள் யாவற்றிலும்
நீர் பங்கெடுப்பதை உணர்கின்றோம்

சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம். (59503)

*நினைவுகளுடன்,*
தாய், மனைவி, பிள்ளைகள்.

## ஈர விழிகளுடன் ஓராண்டில்....

செல்வன்
**மகேந்திரராசா மயூரன்**



*தோற்றம்*
*03.11.1981*

*மறைவு*
*16.03.2006*

நேற்றைக் கென்றிருந்தோம் நாம்
ஆலடியான் அலங்காரம் காண
நீ வருவாய் என்றே!
இன்றும் வருகின்றதே!
ஆலடியான் அலங்காரம்- ஆனால்
நீ மட்டும் வரவில்லை
மீண்டெழுந்து வருவாயென்றே
ஆண்டொன்றாய் காத்திருக்கின்றோம்.

ஸ்ரீமகால்,
அல்வாய். (59306)

அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கை.

## மனதாலும் நினைவாலும் கண்ணீர்க் காணிக்கை



வடமாநில கல்விப்
பணிப்பாளரும்,
வடக்கு - கிழக்கு பரீட்சை
ஆணையாளரும்,
இணுவில் கந்தன்
அடியவருமாகிய

**இரா. சுந்தரலிங்கம்** அவர்கள்

இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னாரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
அன்பு உள்ளங்கள்

இணுவில் ஆத்மீக நண்பர்கள்,
கல்விச் சமூகத்தினா, இணுவில் இந்து
கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,
இணுவையூர் மக்கள்.

தொ.பே.: 0112 586226.

## தவறிவிட்டது

கைலாயபிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி தேவபாலன் ஞானம்பிகை என்பவரது தே.அ. அட்டை (677180374V) 07.04.2007 அன்று யாழ்.நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (சி-52219)

## வெளிவந்துவிட்டது

தேசிய பாடசாலை, மாகாணப் பாடசாலை ஆசிரியர் தெரிவுப் பரீட்சை வழிகாட்டி தொகுப்பு:

**த.தவசேகர்**
BSc., P.G.D.E., P.G.D.P

* பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, துர்கா, சிதம்பரப்பிள்ளை புத்தக நிலையங்களிலும் ஆசிரியரின் வகுப்புகள் நடைபெறும் இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
* D.M.I.,Bitsman, Subra ஆகிய நிலையங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

(59520)

## தவறிவிட்டது

குணரத்தினம் சுரேஸ் என்பவருடைய தே. அ. அட்டை(751843208V), ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அ. அட்டை, காமராஜர் பல்கலைக்கழக அ. அட்டை, வங்கிப் புத்தகம், பண அட்டை என்பன கொண்ட குறிப்புப் புத்தகம் கேசாவில் பிள்ளையார் கோயிலடியில் 07.04.2007 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கேசாவில் பிள்ளையார் கோயிலில் (வண்ணார்பண்ணை) ஒப்படைத்துதவவும். (59544)

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் கல்வியாண்டு 2006/2007

வயம்ப பல்கலைக்கழகத்துக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட (2006/2007 கல்வியாண்டு) மாணவர்கள் உடனடியாக சிரேஷ்ட மாணவர்களைத் தொடர்புகொள்ளவும்.

சிரேஷ்ட மாணவர்கள்,
வயம்ப பல்கலைக்கழகம்.
0779672359, 0773405213

(59506)

## துயர் பகிர்வு

எமது நிறுவன ஆசிரியர் இ.சந்திரராஜாவின்
அன்புத் தந்தையார்
**சின்னத்தம்பி இராஜலிங்கம்**
அவர்களின் மறைவினால் ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

The Express Institute, Irupalai, Kopay. (சி-52215) அதிபர், ஆசிரியர்கள், ஆளணியினர்.


உடனடி வெற்றி

BOC

அதிர்ஷ்ட புதையல் தரும் சேமிப்புச் சான்றிதழ்

முதன்மை வங்கி இலங்கை வங்கியின்
இன்னும் ஓர் புதிய அறிமுகம் புதிய சேமிப்புச் சான்றிதழ்
பெறும் அனைவருக்கும் பரிசில்கள் உண்டு.

சேமிப்புச் சான்றிதழின் மினுங்கும் பகுதியில்
காணப்படும் பரிசில்கள் இதோ....

இன்னும் பரிசில்கள்



* மோட்டார் கார்கள் (Toyota Corolla & Maruti)
* DVD சிஸ்டம்ஸ்
* காஸ் குக்கர்
* கையடக்கத் தொலைபேசிகள்
* மின் விசிறிகள்
* வெந்நீர் போத்தல்கள்
* மின் விளக்குகள்

இலங்கை வங்கி அறிமுகம் செய்யும்
புதுவருட பரிசினைப் பெற்றுக்கொள்ளத் தவறாதீர்கள்

தேசத்தின் வங்கியாளர்
உடனடி அதிர்ஷ்டம் இலங்கை வங்கியிடமிருந்து!


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு | தோற்றம் | | மறைவு |
|---|---|---|---|---|---|
| 04 - 02 - 1909 |  | 11 - 03 - 2007 | 26 - 12 - 1926 |  | 08 - 02 - 2007 |

அமரர் **கந்தையா சரஸ்வதிப்பிள்ளை** — அமரர் **கந்தையா குமாரசாமி**

பண்புடன் வாழ்ந்து
சுற்றம் பேணி
வையத்தில் நாம் நிமிர
வழிகாட்டிய ஒளி விளக்குகளே!
உங்கள் நினைவில்
நனைகின்றோம் நாம் தினமும்

08.02.2007 கனடாவில் இறைவனடி சேர்ந்த கந்தையா குமாரசாமி அவர்களின் துயர் பகிர்வு நிகழ்விலும் 11.03.2007 இறைவனடி சேர்ந்த கந்தையா சரஸ்வதிப்பிள்ளையின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (10.04.2007) செவ்வாய்க்கிழமை அன்னார்களின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சித்தன்கேணி. (59369) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## இந்த அரசமைப்பு வரையறைக்குள் தீர்வுக்கு இடமேதும் கிடையாது

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் மாதிரியை ஒத்த அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காணலாம் என சில அரசியல் பிரகிருதிகள் பெரும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இவ்விடயத்தை ஒட்டி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் இப்போது தெரிவித்துள்ள இரண்டு விடயங்கள் இங்கு கவனிக்கத் தக்கவை.

ஒன்று - இந்தியாவில் இருப்பது போன்ற இன சமரசம் - பாகுபாடின்மை - இலங்கையில் கிடையாது. இங்கு பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி நசுக்குவதே தனது வாழ்வியல் நோக்காகக் கொண்டு அந்தத் தீவிர வெறியில் செயற்படுகின்றது.

அடுத்தது - இலங்கை இனப்பிரச்சினைக்கு இலங்கையின் அரசமைப்புக்குள் உட்பட்டு தீர்வு காணவே முடியாது.

- இந்த இரண்டு கருத்துகளும் ஆழமாக நோக்கப்படவேண்டியவை.

இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் இந்துக்கள். ஆனால் அந்த நாட்டின் ஜனாதிபதியோ சிறுபான்மை சமூகமான முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர். அதுவும் இராமேஸ்வரத்துத் தமிழர். நாட்டின் பிரதமரோ சீக்கியர். எதிர்க்கட்சித்தலைவர்தான் பெரும்பான்மை மக்களான இந்துக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்.

அந்நாட்டின் ஆட்சி அதிகாரம் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம். அவர்களை சிறுபான்மையினராகப் பார்க்காமல் இந்தியராக மட்டும் நோக்கும் தாராளம் - இன சமத்துவம் - பாகுபாடின்மை - இந்தியாவில் உண்டு.

ஆனால் இலங்கைக்கு ........?

இந்த நாட்டின் பிரதமராக அல்லது ஜனாதிபதியாக ஒரு தமிழரோ,ஒரு முஸ்லிமோ வர முடியுமா? நினைத்தே பார்க்க முடியாத விவகாரம் அது. அத்தகைய இன சமரசமும் சகிப்புத் தன்மையும் தாராள விட்டுக்கொடுப்பும் இல்லாத இலங்கைத் தீவுக்கு, இந்தியாவின் அதிகாரப் பரவலாக்கம் முறை மட்டும் போதுமானது, ஒத்து வரக்கூடியது, பிரச்சினைக்குத் தீர்வாக அமையக் கூடியது என்று கூறுவதில் என்ன அர்த்தம் - நியாயம் - இருக்கமுடியும்?

"இந்தியாவில் சிறுபான்மையினர் உயர் பதவிக்கு வரமுடியும். ஆனால், இலங்கையிலோ கடற்படையிலோ அல்லது விமானப்படையிலோ தமிழர்கள் சேர்வது என்பது முடியாது. அத்தகைய இனத்துவேஷ நாடு இது." - என்று பழ நெடுமாறன் சீறுவதில் கருத்துகள் நிறையப் பொதிந்துள்ளன.

அடுத்து, அவர் கூறிய விடயம் இலங்கை அரசமைப்புப் பற்றியது.

பிரிட்டிஷ் காலனித்துவப் பிடியிலிருந்து இலங்கை விடுவிக்கப்பட்ட பின்னர், இந்த நாட்டில் இரண்டு அரசமைப்புகள் - 1972 இலும் பின்னர் 1978 இலும் - கொண்டுவரப்பட்டன.

அவற்றைத் தயாரிப்பதிலோ, ஏற்று அங்கீகரிப்பதிலோ தமிழர் தேசம் சம்பந்தப்படவில்லை. மாறாக, அவற்றைத் தமிழர் தேசம் ஒரேயடியாக எதிர்த்தே நின்றது. ஆனால் சிங்களப் பெரும்பான்மையினால் ஒருதலைப்பட்சமாக - தமிழர் மீது - அவை வலிந்து திணிக்கப்பட்டன.

பெரும்பான்மையினரின் முடிவே தீர்ப்பு என்ற 'ஜனநாயகக் கேலிக்கூத்து' முறையின் கீழ் - அநீதியான முறையில் - தமிழரின் சம்பந்தமோ, இணக்கமோ, இசைவோ இன்றி - அவர்கள் மீது சுமத்தப்பட்ட இந்த அரசமைப்புகளே இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையை இவ்வளவு தூரம் கூர்மையடையச்செய்து முனைப்புற வைத்தன என்றால் மிகையாகாது.

சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும் சிறப்புரிமைகளையும் உயர் தமைகளையும் வழங்கிய தற்போதைய அரசமைப்பு, தமிழர்களை சட்டரீதியாகவும் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் கைங்கரியத்தை கனகச்சிதமாக ஒப்பேற்றியது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு - தமிழரின் தேசிய இன நெருக்கடிக்கு - தீர்வு காணப்பட வேண்டுமானால், தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யத்தக்க வகையில் அதிகாரப்பகிர்வு இடம்பெறவேண்டும் என்பது வெள்ளிடைமலை.

ஆனால் இலங்கையின் இறுக்கமான, நெகிழ்வற்ற அரசமைப்புக்குள் இது சாத்தியமானதல்ல. இந்த அரசமைப்புச் சிறைக்குள் சிக்கிக்கிடக்கும் சிங்களத்தால் அதற்கு வெளியே வந்து தமிழர்களுக்கு நீதி செய்யும் பக்குவமும் இல்லை என்பது மற்றொரு புறம்.

சிறிய அளவில் தன்னும் அரக்கவோ, நகர்த்தவோ, நெகிழ்த்தவோ முடியாத சட்ட அடைப்பாக இருக்கும் இந்த அரசமைப்புக்குள் தன்னைத் தானே சிறை வைத்துக்கொண்டு - அதற்கு வெளியே வரக்கூடாது என்ற குருட்டுத்தனமான பிடிவாதத்தோடு நின்றுகொண்டு- தமிழர்களுக்கு நீதி செய்யப்போவதாகச் சிங்களம் கூறுவது வேடிக்கையானது.

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசர, அவசிய மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டு - முழுக்க, முழுக்க மனிதாபிமான நோக்கத்தோடு - உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பையே இந்த ஒற்றையாட்சி அரசமைப்பின் வரையறைகளைக்காட்டி இலங்கையின் நீதிமன்றம் நிராகரித்த நிலையில்-

தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் அதிகாரப் பகிர்வுக்கோ, அதன் அடிப்படையிலான தீர்வுக்கோ இந்த அரசமைப்பு வரையறைகள் நெகிழ்ந்து கொடுக்கும் என்றோ அந்த அரசமைப்புக்குள் சிக்கிக் கிடக்கும் நீதித்துறை அனுமதிக்கும் என்பதோ சாத்தியப்படக்கூடியவையே அல்ல.

எனவே, தற்போதைய அரசமைப்புக்குள்தான் தீர்வு என்பதும், தமிழர்களைத் தொடர்ந்தும் அடக்கி வைத்திருப்பது என்பதும் ஒரே சிந்தனைப் போக்கின் அடிப்படைகள்தாம்.

# கொள்ளைகளைத் தடுக்கும் பணி யாழ்., நல்லூர் பகுதிகளில் ஆரம்பம்

## படையினர் - பொலிஸார் இணைந்து பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

குடாநாட்டில் கொள்ளைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ள 'விழிப்புக் குழுக்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் செயற்பட ஆரம்பித்துள்ளன.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். அரச அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், கிராம அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டவர்களை உள்ளடக்கி விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விழிப்புக்குழுக்களின் நோக்கம், செயற்பாடு தொடர்பாக 512 ஆவது படையணி அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

படை அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் விழிப்புக்குழுக்களின் தலைவர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். இந்த விழிப்புக்குழுக்களின் செயற்பாடுகளுக்குப் படையினரும் பொலிஸாரும் பூரண பாதுகாப்பையும் ஆலோசனைகளையும் வழங்குவர் என அக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றால், அதுகுறித்து உடன் படையினருக்கு தகவல் கொடுக்க வேண்டும். சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்து செல்லக்கூடிய குழு ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ். 512 ஆவது படைத் தளபதி லெப். கேணல் பி. ஆர். வணிகசூரிய தெரிவித்தார்.

தொலைபேசி இலக்கங்களான 118, 119, 222 7190 ஆகியவற்றுக்கு உடன் தகவல் கொடுத்தால், கொள்ளை நடைபெறும் இடத்துக்குப் படையினர் சமுகமளிப்பர் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

# பலவந்த ஆட்கடத்தலை உடன் குற்றவியல் கோவையில் சேர்க்குக

## கொழும்பு மாநாட்டுப் பிரகடனத்தில் கோரிக்கை

கொழும்பு, ஏப். 10

பலவந்த ஆட்கடத்தல் குற்றவியல் கோவையில் சேர்க்கப்பட வேண்டும் என்பது உட்பட எட்டுக் கோரிக்கைகள் நேற்று கொழும்பில் நடந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

அவை வருமாறு:-

* இந்நாட்டில் எமது உறவுகளைப் பறித்தெடுத்த காணாமற்போதல் சம்பவங்கள் நடைபெற்றும், நடைபெற்ற வண்ணமும் இருக்கின்றன என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

* 15 சம்பவங்கள் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச நிபுணர்களின் குழு ஆகிய குழுக்களின் அங்கத்தவர்களின் அனுபவம், ஆற்றல் ஆகியவை மீது பெரும் மரியாதையை வெளிப்படுத்திடும் அதேவேளையில், இக்குழுக்களின் செயற்பாடுகள் மூலமாக எமது காணாமற்போன உறவுகளைக் கண்டுபிடிப்பதற்கும், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதைத் தடுப்பதற்கும் முடியாமல்போயுள்ள யதார்த்தம் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

* காணாமல்போனோர் தொடர்பிலான மஹாநாம திலகரட்ண ஆணைக்குழுவின் அறிக்கை உடனடியாக எமக்கும், இந்நாட்டின் அனைத்து பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

* ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் திருமதி லுயிஸ் ஹாபர் அம்மையாரை இலங்கைக்கு நேரடி விஜயம் செய்யும்படி அழைத்திட வேண்டும்.

* பலவந்த ஆட்கடத்தல் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக விடுத்துள்ள கோரிக்கையை சாதகமாக பரிசீலித்து அக்குழுவின் ஒத்தாசைகள் மூலமாக எங்களது காணாமல்போன உறவுகளை மீட்டு எடுப்பதற்கும், இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் தொடராமல்தடுப்பதற்கும் முன்வரவேண்டும்.

* காணாமற்போனவர்களை பற்றிய விசரணைகளை முன்னெடுப்பதற்கு பொருத்தமான சர்வதேச சுதந்திர மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு ஒன்றினை ஏற்படுத்துவதற்கும், அக்குழு அரசு மற்றும் எமது மக்கள் கண்காணிப் புக்குழு உள்ளிட்ட அனைத்து மனித உரிமைகள் காவலர்களுடனும் இணைந்து செயற்படுவதற்கும், இதன் மூலமாக இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கும், இத்தகைய சம்பவங்கள் தொடர்வதை தடுப்பதற்கும், சட்ட பூர்வமற்ற கலாசாரத்தை ஒழிப்ப தற்கும் முன்வரவேண்டும்.

* பலவந்த ஆட்கடத்தல் இலங்கையின் குற்றவியல் கோவையில் சேர்க்கப்பட வேண்டும்.

* பலவந்த ஆட்கடத்தலில் இருந்து மக்கள் பாதுகாக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கை பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அனைத்து இலங்கையர்களையும், சர்வதேச சமூகத்தையும் எமது இந்த கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கும்படி கோருகின்றோம். (சி)

# 'நாங்கள் கள்வர்' என்ற வாசக அட்டையுடன் இருவர்!

## சத்திரத்துச் சந்தியில் நிறுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப். 10

கொட்டடி மற்றும் நாவாந்துறைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் ஊரடங்கு அமுலில் இருந்த இரவு வேளையில் திருட்டில் ஈடுபட முயன்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு நேரத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் கொட்டடியில் நடமாடிய 39 வயதான ஒருவரும், நாவாந்துறையில் நடமாடிய 29 வயதான மற்றொருவரையும் படையினர் கைது செய்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து சில பொருள்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்டவர்களை தாம் விசாரணை செய்து வருவதாகவும் இன்று அவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை -

இவ்விரு நபர்களும் 'நாங்கள் கள்வர்' என்ற சுலோகத்துடனான அட்டைகள் கழுத்தில் தொங்கிய நிலையில் சத்திரத்துச் சந்தியில் நேற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். (அ-1)

## வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு இங்கே சம்பளம் வழங்குவதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 10

வெளிமாவட்டங்களில் இருந்து குடாநாட்டுக்கு வந்து மீளத் திரும்ப முடியாத நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு, சம்பளம் வழங்குவதற்கு வடக்கு மாகாணக் கல்வியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக சுற்றுநிருபம் ஒன்றை அமைச்சு யாழ். வலயங்களுக்கு நேற்று அனுப்பி வைத்தது.

அந்தச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் - யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றவர்களுக்கு தொடர்ந்து அவர்கள் இணைப்புப் பெற்ற பாடசாலைகள் மூலம் சம்பளம் வழங்கப்படும்.

இணைப்பு பெறாத ஆசிரியர்களுக்கு மார்ச் மாதம் வரை சம்பளம் வழங்கப்படும்.

இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை அவர்கள் பணியாற்றிய கல்வி வலயத்தில் இருந்து பெற்றே கொடுப்பனவு செய்யப்படும்.

இதற்கு வசதியாக தற்காலிக இணைப்புப் பெற்றவர்கள் தமது நியமனக் கடிதங்களுடனும் இணைப்புப் பெறாதவர்கள் தமது விவரங் களுடனும் யாழ். கல்வி வலயத் துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

## நாளை

பங்குனி - 28
புதன்கிழமை
11.04.2007
திதி: அட்டமி
காலை: 06.49
நவமி பின்னிரவு : 05.50
நட்சத்திரம்: உத்தராடம்
முன்னிரவு : 07.32
சுபநேரம் : 04.36 - [illegible]
ராகுகாலம் : 12.06 - 01.36

## இந்த மாதத்திற்குரிய மண்எண்ணெய்

அரியாலை, ஏப். 10

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முற்றவெளி எரிபொருள் விற்பனை நிலையத்தில் இந்த மாதத்திற்கான நான்கு லீற்றர் மண் எண்ணெய் பங்கீட்டு அட்டைக்கு இப்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மண் எண்ணெய் பெறாதவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப-17)

## சென்.ஜோன்ஸ் கல்லூரி புதிய அதிபர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் 25ஆவது அதிபராக வண. ஜேம்சன் ஞானபொன்ராஜ் பதவி ஏற்பது தொடர்பான விசேட ஆராதனை நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் அதிவண. துலிப் டி. சிக்காரா ஆராதனையை நடத்தி வைப்பார். (அ-1)

## இலங்கை வங்கிக் கிளைகள் புத்தாண்டன்று திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். மாவட்டத்திலுள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும், சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று விசேடமாகத் திறந்திருக்கும்

வாடிக்கையாளர்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் அறிவித்திருக்கிறார்.

இதேவேளை - சனிக்கிழமை தமிழ் - சிங்கள புத்தாண்டு பிறப்பதை முன்னிட்டு, நாளை மறுதினம் வியாழக்கிழமை சகல கிளைகளிலும் அரை நாள் மட்டுமே முற்பகல் 10 மணி வரையே சேவைகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-203)

## கடைசி பஸ் சேவை 4.30 மணிக்கு இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சகல இடங்களுக்குமான கடைசி பஸ் சேவை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாக கடைசி பஸ் சேவை மாலை 4 மணிக்கு இடம்பெற்றது.

ஊரடங்கு மாலை 7 மணி முதல் நடைமுறைப்படுத்தப்படுவதால் நேற்று முதல் மாலை 4.30 மணிக்கு கடைசி பஸ் சேவை இடம்பெறுவதாக போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-1)

## அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்று வந்தது "றுகுணு"

யாழ்ப்பாணம், ஏப். 10

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான ஒரு தொகுதி பொருள்களுடன் 'றுகுணு' கப்பல் நேற்று யாழ். வந்தது.

இக்கப்பலில் பால்மா வகைகள், உழுந்து, கடலை, சோயா மற்றும் குளிப்பானங்கள், இரும்புப் பொருள்கள் ஆகியன எடுத்து வரப்பட்டுள்ளன.

மூளாய் வைத்தியசாலைக்கு வெளிநாட்டு உதவியாகக் கிடைத்துள்ள வைத்திய உபகரணங்களும் இக்கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

புதுவருடத்துக்கான பெரும் தொகையான உடுபுடைவைகளும் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

மேற்படி கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.(அ-1-8)

## திட்டமிடல் சேவை பரீட்சைக்கு செல்பவர்களுக்குப் பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.10

இலங்கை திட்டமிடல் சேவை வகுப்பு 2 தரத்துக்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்தவர்கள் பாதுகாப்பு அனுமதியைப் பெற்று பயணப் பதிவுகளை யாழ். செயலகத்தில் மேற்கொள்ளலாம்.

அரச சேவையில் உள்ளவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி யும் ஏனையோர் எதிர்வரும் 17ஆம் திகதியும் செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பயண ஏற்பாட்டை உறுதிசெய்யும்படி மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி கேட்டுள்ளார். (அ-1)

## சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் யாழ். வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஏப். 10

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

விமானம் மூலம் எடுத்து வரப்பட்ட பெறுபேறுகள், நேற்று நண்பகல் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன.

அங்கிருந்து பெறுபேறுகள் வலய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன. பாடசாலை அதிபர்கள் அந்தந்த வலய அலுவலகங்களில் பெறு பேறுகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பரீட்சை முடிவுகள் கடந்த 3ஆம் திகதி இணையத் தளத்தில் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (அ-1)

## பண்டத்தரிப்பில் கிளைமோர்; சிப்பாய் பலி, இருவர் காயம்

வலி.தென்மேற்கு, ஏப்.10

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பலாலி படைத்தலைமையக ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் இரு படையினர் காயமடைந்தனர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் பின் அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது. (அ-1-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
## Registration of Inquiring Officers

Public Officers / Retired Public Officers / Retired University Teachers who were in the rank of Senior Lecturer and above or Senior Assistant Registrar and above in any Sri Lankan University with experience in the system of General Administration / University Administration / Academic Administration and in holding inquiries are invited to register with the University as Inquiring Officers to conduct disciplinary inquiries at the University of Jaffna and the Vavuniya Campus of the University of Jaffna.

Those who wish to register with the University as Inquiring Officers are requested to furnish to me on or before 30.04.2007 in writing their full name, designation (at present or at the time of retirement), contact details (address and Telephone Number) ane their experience in conducting inquiries.

**Registrar.** (C/52222)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

அமரர்

**பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)**

**நினைவுப் பேருரை**



"போர்க்கால அனர்த்தங்களிற்குள்ளும் வட இலங்கை மக்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தது எப்படி?"

'War & Health in Northern Sri Lanka How did the People survive?'

பேருரை வழங்குநர்: வைத்திய கலாநிதி ந.சிவராஜா M.B.B.S. (Cey), D.T.P.H.(Lond), M.D.(Col.)

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி: இன்று (10.04.2007)செவ்வாய்க்கிழமை

நேரம்: பிற்பகல் 2 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/52213) -பதிவாளர்.

---

# இதய அஞ்சலி



எக்ஸ்போ விமானசேவையின் யாழ். கிளை முகாமையாளர் கு.வசீகரனின் அன்புத் தாய்

திருமதி

**ஜெயபூபதி குலசிங்கம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நிர்வாக இயக்குநரும் உதயன் குடும்பத்தினரும்.

(சி/52221)

---

# நீங்காத நினைவலைகள்

| 25 ஆவது ஆண்டு | 3ஆவது ஆண்டு |
|---|---|
| திருமதி பூ.செபமாலை அம்மா | அமரர் வை. பூதத்தம்பி |
| (நேசம்) | (இம்மனுவேல்) |
| தோற்றம்: 08-05-1920 | தோற்றம்: 02-10-1910 |
| மறைவு: 10-04-1982 | மறைவு: 21-01-2004 |

ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும் (தி.பா.27.5)

சென். பீற்றர்ஸ் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (59534)

பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

---

CARITAS HUDEC

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



**ச.கா.பத்மநாபன்**



**செ.பிரதீப்குமார்**

08 - 12 - 1951 மலர்வு 28-12-1977

உதிர்வு

10-04-2006

கியூடெக்/ கரித்தாஸ் நிறுவனத்தில் பணியாற்றி அகாலமரணமடைந்த ஊழியர்களின் முதலாம் ஆண்டு நினைவை ஒட்டி அஞ்சலி செலுத்தும் சக பணியாளர்கள்

(சி-52224)

---

## ஐ.நா. குழு.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்களது காணாமற்போன உறவுகளின் விடுதலைக்காகபிரார்த்திக்கும் அதேவேளை, இது தொடர்பிலான எங்களது கவலையை பகிர்ந்து கொள்கின்றோம். மனித உயிர்கள் புனிதமானவை என்றும் இன, மத, ஜாதி, பொருளாதார அந்தஸ்து போன்ற பேதங்களுக்கு அப்பால் எந்த ஒரு நபரும் காணாமற்போக முடியாது என்றும் நம்புகின்றோம்.

கடந்த காலங்களிலே எமது நாட்டில் இளம் ஆண்களும், பெண்களும் காணாமற்போன காலகட்டம் மீண்டும் திரும்பி வந்துள்ளதை எண்ணி அதிர்ச்சியடைகின்றோம். அக்காலக்கட்டத்தில் காணாமற்போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களுடன் நாம் ஐக்கியப்படுகின்றோம்.

கடந்த கால காணாமற்போதல் நிகழ்வுகளுக்கு எதிராக குடும்ப உறவுகளுடன் இணைந்து போராடியவரான இன்றைய ஜனாதிபதியின் தற்போதைய அரசு இன்று தேசிய, சர்வதேசிய அவதானங்களைப் பெற்றுள்ள எமது உறவுகள் தொடர்பிலான காணாமற்போதல் சம்பவங்களை அலட்சியப்படுத்துவதைக் கண்டு கவலையடைகின்றோம். குறிப்பாக காணாமற்போனவர்களை கண்டு பிடிப்பதிலும், இது தொடர்பிலான தேசிய, சர்வதேசிய அமைப்புகளின் முயற்சிகளை அங்கீகரிப்பதிலும், இந்த அரசிற்கு அக்கறை இல்லாததைக் கண்டு கவலையடைகின்றோம்.

காணாமற்போனோர் தொடர்பிலான மஹாநாம திலகரட்ண ஆணைக்குழு, 15 சம்பவங்கள் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழு, சர்வதேச நிபுணர்களின் குழு ஆகியவைகளை நியமித்திருப்பதன் மூலம் இந்த அரசு இவ்விவகாரம் தொடர்பிலான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகக் காட்டிகொண்டாலும், எந்தவொரு அமைப்பின் மூலமாகவும் எமது காணாமற்போன உறவுகள் மீண்டும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதையும், இந்த நியமனங்களுக்கு பிறகும் பாரிய காணாமற்போதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்பதையும் நாம் சுட்டிகாட்டுகின்றோம்.

காணாமற்போனவர்களின் குடும்ப உறவுகள் மற்றும் நண்பர்கள் ஆகிய எமக்கு எமது உறவுகள் மீட்டுத் தரப்படவேண்டும். எமது உறவுகளுக்கு என்ன நடைபெற்றுள்ளது என்பதுவும், இந்தச் சம்பவங்களுக்கு காரணமானவர்கள் யார் என்பதுவும் எமக்குத் தெரிய வேண்டும்.

எமது உறவுகளை இழந்து தவிக்கும் இத்தகைய துர்ப்பாக்கிய சம்பவங்கள் இடம்பெறுவது முற்றுமுழுதாக நிறுத்தப்படவேண்டி வெறும் வாக்குறுதிகளுக்கு அப்பால் சென்று காத்திரமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் - என்று அந்தப் பிரகடனத்தில் உள்ளது. அந்தப் பிரகடனத்தில் மொத்தம் எட்டுக் கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ-சி)

## அனுமதி மறுப்பை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடியிருந்த தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார். அங்குகூடியிருந்த தமிழ் மக்கள் கைதுசெய்யப்பட்ட பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகளை விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தினர். அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்த அன்ரனி ரூசல், கைதானவர்களின் விடுதலை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். அத்துடன் அனைவரையும் அமைதியாகத் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

நகரசபை உறுப்பினர் அன்ரனி ரூசல் சந்திப்புக்குப் பின்னர் இனியும் ஒன்றுகூடினால் அனைவரையும் கைது செய்வோம் என பிரான்ஸ் பொலிஸார் விரட்டிய போதும் தமிழ்மக்கள் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதேவேளை, பிரான்ஸ் பொலிஸார் காணும் தமிழர்களை திருப்பியனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு, ரொக்கட்றோ நிலக்கீழ் ரயில் நிலையத்தை மூடி திருப்பியனுப்பும் ஏற்பாட்டையும் மேற்கொண்டனர். (சி)

## விடுதலைப்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை முதல் தடவையாகச் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது- தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகி இருக்கிறார்களா என்று செய்தியாளர்கள் அவரிடம் கேட்டனர். அது எங்களுக்கு ஓர் அச்சுறுத்தல் அல்ல. விடுதலைப் புலிகள் எங்களுக்கு எப்போதுமே அச்சுறுத்தலாக இருந்ததில்லை. அதனைவிட அவர்கள் எமக்கு எரிச்சல் ஊட்டுபவர்களாகவே இருக்கிறார்கள் - என்று விமானப்படைத்தளபதி தெரிவித்தார்.

உலகத்திலேயே தீவிரவாத அமைப்பு ஒன்று விமானப் படையைக் கொண்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். இலங்கை மற்றும் நாடுகளை இது விடயம் கவலைக்குள் ஆக்கியிருக்கின்றது. (அ)

---

**PAPER CLASS**

வணிகக்கல்வி - 2007

இறுதிப்பிரிவிற்கான துரித மீட்டல்

BY: யசோ

ஆரம்பம் : 11.04.07 - Wed. - 4 p.m.

**யூனிவேர்சல்**

**(கந்தர்மடம்)**

---

## வீடு விற்பனைக்கு

3 ¾ பரப்பு காணியில் சகல வசதியுடன் கூடிய வீடு நல்லூரடியில் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு. 0779675569

---

## புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை

SALE 20% கழிவு

கொட்டன் புடைவைகள்

கொட்டன் சல்வார்

**கலாஞ்சலி சாரீஸ்**

இல.169, இராமநாதன் வீதி, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில்) திருநெல்வேலி

தொ.பே.: 0777 627141 (59536)

---

## தவறிவிட்டது

அன்னலிங்கம் டிலானியின்தேசிய் அ.அட்டையும் இராணுவ அ.அட்டையும் 05.04.2007 அன்று கொக்குவிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும்.

சுதா தொலைத் தொடர்பு சேவை, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

(59515)

---

## சோடாமூடி விற்பனைக்கு

கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சோடா மூடிகள் விற்பனைக்குண்டு.

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

தொ.பே.: 222 2567

(சி-52220)

---

## திண்டிவனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யலில் வைக்குமாறு [illegible] உத்தரவிட்டது.

சூத்திரதாரியான [illegible] தற்காக பொலிஸார் பதினொரு தனிப்படைகளை அமைத்திருந்தன [illegible] வனத்தை அடுத்த புலியூரில் உள்ள (புதுச்சேரி மாநிலம்) மணலிப்பட்டைச் சேர்ந்தவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெடி மருந்துக் கிடங்கின் ஊழியர்கள் இருவர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்த வெடிவிபத்தில் 17 பேர் உடல் சிதறி மரணமானதும் 50இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இதேவேளை -வெடிபொருள் ஏற்றிச்சென்ற வாகனத்தில் இருந்த பாபு, பலராமன், குமார் ஆகிய மூவரும் குண்டுவெடிப்பில் பலியானதாகக் கூறப்படுகிறது. (அ-1)

## ஆஸியிலிருந்தே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டன. ''புலிகளுக்கு பெருமளவு நிதி கிடைக்கும் வளமான நாடாக ஆஸ்திரேலியா உள்ளது. ஆஸியிலிருந்து கிடைக்கும் அந்தப் பணம் பொது அல்லது தர்ம விவகாரங்களுக்குச் செலவிடப்படுவதில்லை. இவை அனைத்தும் சர்வதேசக் கறுப்புச்சந்தையில் ஆயுதங்கள் கொள்வனவு செய்யவே பயன்படுத்தப்படுகின்றது.'' - என்று கொஹன அங்கு தெரிவித்திருக்கின்றார். (சி)

## தமிழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமாவளவன் அங்கு உரையாற்றினார்.

''தமிழக மீனவர்களின் பாதுகாப்பில் மத்திய அரசு எந்த அக்கறையும் காட்டவில்லை. இனியும் நடவடிக்கை எடுக்காவிட்டால் பொது அமைப்புகளுடன் இணைந்து மாபெரும் போராட்டம் நடத்து வோம்'' என அங்கு பேசுகையில் அவர் கூறினார். (அ-1)

---

# தொழிற்பயிற்சிகள்

**RADIO, T.V AND VIDEO DECK REPAIRING**

| | | | |
|---|---|---|---|
| Radio | Video Deck | Satellite | |
| Television | CD Player | Printer | |
| Amplifier | UPS | Monitor | (காலம் 9 மாதங்கள்) |

**MOBILE PHONE REPAIRING**

| | | |
|---|---|---|
| Hard ware | Hard ware Repairing | |
| Soft ware | Soft ware Trouble Shooting | |
| Phone Lock | | (காலம் ஒரு மாதம்) |

**REFRIGERATION AND AIR CONDITIONING**

| | | | |
|---|---|---|---|
| Refrigerator | Split Type AC | Package AC | |
| Deepfreezer | Window AC | General plant AC | (காலம் 6 மாதங்கள்) |

[illegible]

ஆரம்பம் : 11.04.2007 (கிழமை நாள்கள்)

15.04.2007 (சனி, ஞாயிறு)

விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

No.45, Clock Tower Road, Jaffna. T.P: 021 222 6434, 0773151200.

Dr.ஸ்ரீ பத்மநாதன் கட்டடம், (சிலையடி), புலோலி. (59505)

---

# கண்ணீர் அஞ்சலி



கல்விப் புலத்தில் நீண்டகாலம் நற்சேவையாற்றி வடமாநில கல்விப் பணிப்பாளர் என்ற பதவியை ஏற்று அப் பதவி மூலம் கல்வி உலகுக்கு அரும்பணி ஆற்றிய

**இரா.சுந்தரலிங்கம்**

அவர்களின் திடீர்மறைவு பேரிழப்பாகும்.

கல்விப் பணிப்பாளரும், ஊழியர்களும் வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

---

# கண்ணீர் அஞ்சலி



எமது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றி காரைநகர், வேலணையில் பணிபுரிந்து இறைபதமெய்திய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

**மகானந்தன் அழகேந்திரன்**

அவர்கள் காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருறும்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊர்காவற்றுறை. (59552)

உதவி அரசாங்க அதிபரும் சக உத்தியோகத்தர்களும்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**இளையதம்பி இராசரத்தினம்**

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

ஆண்டவன் படைப்பில்: 08-01-1927

ஆண்டவன் அணைப்பில்: 05-04-2006

திதி: ஸப்தமி 10.04.2007

இவ்வுலகில் உங்கள் கடமை முடித்து இனி இங்கென்ன வேலையென என்னைத் தனியத் தவிக்கவிட்டு இறைபதம் அடைந்தீர்களோ அப்பா!

உங்கள் அருமை மகன்

இ.இராஜராஜேஸ்வரன் (இஞ்சினியர் அண்ணா) யாழ்ப்பாணம்.

'ராஜவாஸம்' புலோலி மேற்கு,பருத்தித்துறை (59538)

---

# மரண அறிவித்தல்

## யோசவ் யஸ்ரின் டேமியன்



புகையிரத வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த யோசவ் யஸ்ரின் டேமியன் நேற்று(09.04.2007) திங்கட்கிழமை டோகா, கட்டாரில் காலமானார்.

அன்னார் சுகுணாவின் அன்புக் கணவரும் கிறேஷியா லொறேனின்(A/L 2008 மாணவி யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி, கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.

தகவல்: J.D.சுகுணா (மனைவி).

---

**சந்தேகத்துக்கிடமான பொருள்களை தவிர்ப்போம்! அது வெடிபொருளாக இருக்கலாம்**

சர்வோதயம் வெண்புறா யுனிசெவ்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தாரால் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org